

திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்

Verein SAIVANERIKOODAM, Europaplatz.01, 3008 Bern

நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

ganalingesuram@gmail.com
facebook.com/saivanerikoodamSwiss
☎ 078 697 70 25
078 759 99 72
079 275 68 62

காலமற்ற தோன்றாப் பெருமையன் "ஞானலிங்கேச்சுரன்" சிவபெருமான் கழகம் கண்டு, படைத்த தமிழும் சைவமும் ஒப்பிடமுடியாப் பெரும் பேறுகொண்ட திருநெறியாகும். இப்பெரும் நெறியினை ஒழுகி வாழ்வதை நோக்கமாகக்கொண்டு சைவநெறிக்கூடம் 1994ல் சுவிஸ் நாட்டில் தோற்றம் பெற்றது. பெருங்கடலில் சேரும் சிறுதுளி வெள்ளமாக, அப்பர் சுவாமிகள் திருநாவுக்கரசர் அருளிய தமிழ்ப்பணித் திருத்தொண்டை, ஞானக்குழந்தை ஞானசம்பந்தரை வணங்கி, ஆரூரன் தொண்டனைத் தொழுது, மாணிக்கவாசகர், சேக்கிழார் பெருமான் திருவடிபணிந்து சைவநெறிக்கூடம் பணிசெய்கிறது. இதன் அடிப்படையில் வருடம் தோறும் சைவநெறிக்கூடத்தால் முன்னெடுக்கப்படும் எம் செந்தமிழ்ச் செல்வங்களுக்கான "**சைவமும் தமிழும் போட்டிநிகழ்வு**" கீழ்க்காணும் வகையில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## "சைவமும் தமிழும் போட்டி நிகழ்வு – 2016"

| காலம் | இடம் | தொடர்புகளுக்கு |
|---|---|---|
| **11. 06. 2016** | சூரிச் | திரு. திருஞானசம்பந்தர் இலங்கேஸ்வரன்<br>078 874 00 39 |
| **11. 06. 2016** | மர்த்தினி (சியோன்) | திரு. தெய்வேந்திரம் சிறீதரன்<br>078 619 32 18<br>திருமதி. பாலகுமரன் சரோஜினிதேவி,<br>078 805 07 85 |
| **12. 06. 2016** | பேர்ன் | திரு. குழந்தை விக்னேஸ்வரன்<br>078 759 99 72<br>திரு. காராளசிங்கம் விஜயசுரேஸ்<br>079 275 68 62 |
| **12. 06. 2016** | லவுசான் | திரு. நவம் 076 585 85 53 |
| **05. 06. 2016** | ஜெனீவா | ஜெனீவா தமிழ் கலைகலாச்சார மன்றம்<br>திருமதி. சந்திரபாலன் இராஜேஸ்வரி<br>079 631 29 98 |
| **05. 06. 2015** | பாசல் | திரு. நேசன் 078 307 52 24 |

போட்டி நடைபெறும் முகவரிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

"ஒரு ஊராட்சியில் **(Gemeinde)** குறைந்தது 30 பிள்ளைகள் போட்டியில் பங்கேற்பின் அவ்விடத்தில் போட்டிகள் சைவநெறிக்கூடத்தால் தனியாக நடாத்தப்படும்"

**இப்போட்டி தொடர்பான மேலதிக தகவல்கள் பெற 078 697 70 25 எனும் இலக்கத்துடன் அல்லது ganalingesuram@gmail.com மின்னஞ்சல் முகரியுடன் தொடர்புகொள்ளவும். மின்னஞ்ல் ஊடாகத் தொடர்புகொண்டு படிவத்தினையும் மற்றும் பாடல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.**

போட்டியில் பங்கெடுக்கும் அனைவருக்கும் மதிப்பளிப்பும், பங்கெடுத்தமைக்கான சான்றிதழும், நினைவுப்பரிசும், வெற்றியீட்டும் போட்டியாளர்களுக்கு வலயரீதியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்கேடயமும், வெற்றிச் சான்றிதழும் பேர்ன் மாநிலத்தில் நடைபெறும் "சைவமும் தமிழும் 2016 விழாவில்" வழங்கப்படும். விழா நடைபெறும் காலம், இடம் என்பன போட்டி நுழைவுக் கடிதத்துடன் அனுப்பிவைக்கப்படும். போட்டியின் நோக்கம் பிள்ளைகளை ஊக்குவிப்பது ஆகும். மேலும் குழந்தைகளின் மனதில் வெற்றி தோல்விகளை எதிர்கொள்ளும் மனப்பாங்கினையும், உளத்திறனை வளர்க்கவும் ஊக்கப்படுத்தவும் இது வழிசெய்யும். அன்புமிக்க பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை இப்போட்டியில் பங்கெடுக்கச்செய்து இளந்தமிழ்ச் செல்வங்களின் தமிழ்த்திறன் வளர்க்க அன்புடன் அழைக்கின்றோம்.

**போட்டிகள்: தேவாரம் - திருவாசகம் - திருப்புகழ் - திருக்குறள் - திருவுருவண்ணம்தீட்டல் - திருவேடம் - திருக்கதை**

| வயது | பிரிவு | தேவாரம் | திருவாசகம் | திருப்புகழ் | திருக்குறள் | திருக்கதை |
|---|---|---|---|---|---|---|
| பி. ஆ. 2011 (5 வயது) | இளந்தளிர் | தோடுடையசெவியன் | பூசுவதும் வெண்ணீறு | இறவாமல் | கடவுள் வாழ்த்து 1 – 3 குறள் | திருஞானசம்பந்தர் 1 – 4 நிமிடம் |
| பி. ஆ. 2010 (6 வயது) | தளிர் | மந்திர மாவது நீறு | பூசுவதும் வெண்ணீறு | ஏறுமயிலேறி | வான்சிறப்பு 1 – 3 குறள் | மாம்பழக்கதை 4 – 6 நிமிடம் |
| பி. ஆ. 2009 (7 வயது) | மழலை | இல்லக விளக்கது | முத்திநெறி அறியாத | பக்தியால் | வான்சிறப்பு 1 – 3 குறள் | செம்மனச்செல்வி 1 – 4 நிமிடம் |
| பி. ஆ. 2008 (8 வயது) | பாலர் | தலையே நீவணங்காய் | முத்திநெறி அறியாத | துள்ளுமத வேட்கை | வான்சிறப்பு 1 - 5 குறள் | எம் ஈழத்து மன்னன் 1 – 4 நிமிடம் |
| பி. ஆ. 2007 (9 வயது) | மீளி | மாசில் வீணையும் | தென்பால் உகந்தாடும் | பக்தியால் | நீத்தார்பெருமை 1 – 5 குறள் | திருவள்ளுவர் 4– 6 நிமிடம் |
| பி. ஆ. 2006 (10 வயது) | சிறுவர் | தலையே நீவணங்காய் | உற்றாரை யான்வேண்டேன் | நாடித் தேடித் | நீத்தார்பெருமை 1 – 5 குறள் | பாரதியார் 5 – 6 நிமிடம் |
| பி. ஆ. 2005 (11 வயது) | கீழ்ப்பிரிவு | பித்தா! பிறைசூடி! | பால்நினைந் தூட்டுந் | நாடித் தேடித் | இல்வாழ்க்கை 1 – 10 குறள் | குங்குலியக் கலய 5 – 8 நிமிடம் |
| பி. ஆ. 2004 (12 வயது) | நடுப்பிரிவு | மீளா அடிமை | அம்மையே அப்பா | எதிரி லாத பத்தி | இல்வாழ்க்கை 1 – 10 குறள் | மனுநீதிச் சோழன் 6 – 8 நிமிடம் |
| பி. ஆ. 2003 (13 வயது) | திறவோர் | பூச இனியது நீறு | பாரொடு விண்ணாய் | கைத்தல நிறைகனி | விரும்தோம்பல் 1 – 10 குறள் | ஆறுமுக நாவலர் 6 – 8 நிமிடம் |
| பி. ஆ. 2002 (14 வயது) | மேற்பிரிவு | அங்கத்துறு நோய்கள்ளடி | மெய்தான் அரும்பி | நீலங்கொள் மேகத்தின் | விரும்தோம்பல் 1 – 10 குறள் | கடையிற்சுவாமி 7 – 9 நிமிடம் |
| பி. ஆ. 2001/2000 (15/16 வயது) | மிகுமேல் | பூவார் மலர் கொண்டடியார் | கடையவ னேனைக் | எனைய டைந்த | கல்வி 1 – 10 குறள் | பட்டினத்தடிகள் 7 – 9 நிமிடம் |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள போட்டி நிலையப் பொறுப்பாளர்களிடமும் பேர்ன் ஞானலிங்கேச்சுரத்திலும், மர்த்தினி ஞானலிங்கேச்சுரத்திலும் போட்டி விண்ணப்பப்படிவம் மற்றும் போட்டிக்கான பாடற்பதிப்பினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**போட்டி விதிமுறைகள்:**

- நடுவர்தீர்ப்பே இறுதியானது - விண்ணப்பத்துடன் போட்டியாளரது அடையாள அட்டை நகல் கட்டணச்சான்று (Empfangsschein) இணைக்கப்படவேண்டும்.
  - **<u>முடிவுத்திகதி: 27. 05. 2016</u>! இத் திகதிதிக்குப் பின்னர் அனுகப்படும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது!!!**
- **விண்ணப்பம் முடிவுத்திகதிக்கு முன்னர் SAIVANERIKOODAM, Europaplatz.01, 3008 Bern எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பப்பட வேண்டும்.**

**போட்டிக்கட்டணம்:**
ஒருபோட்டிக்கான கட்டணம் 10.-- சுவிஸ்பிராங்குகள் ஆகும். மூன்று போட்டிகளுக்கு மேலாக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு போட்டிக்கும் மேலதிகமாக 5.-- சுவிஸ்பிராங்குகள் மட்டும் செலுத்தப்படவேண்டும். ***ஒரு குடும்பத்தில் இருந்து மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள், அனைத்துப் போட்டிகளிலும் பங்கெடுப்பின், 3வது பிள்ளைக்கு போட்டிக்கட்டணம் கிடையாது.*** சைவநெறிக்கூடத்தின் 30-468890-2 தபாற்கணக்கில் (PostFinance) போட்டிக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான சான்றினை விண்ணப்பத்தோடு இணைத்து அனுப்பவேண்டும். தபாற்கட்டணக்கட்டளையில் நோக்கம் (Zahlungszweck) என இருக்கும் பெட்டகத்தில் போட்டிக்கட்டணம் எனத் தமிழில் குறிப்பிடவும்.

**திருவுரு வண்ணம் தீட்டல்:** போட்டியில் வழங்கப்படும் திருவுருவத்திற்கு போட்டியாளர் தாம் விரும்பும் வகையில் வர்ணம் தீட்டலாம். போட்டியில் பங்கெடுக்கும் பிள்ளைகள் வர்ணம் தீட்டுவதற்கான அனைத்துப் பொருட்களையும், வர்ணத்தினையும் தாமே போட்டிநிலையத்திற்கு எடுத்துவரவேண்டும்.

**திருவேடம் தாங்கல்:** பேர்ன்மாநிலத்தில் போட்டிகளின் நிறைவில் நடைபெறும் சைவமும் தமிழும் பரிசளிப்பு நிகழ்வில் *(காலம், இடம், பின்னர் அறிவிக்கப்படும்)* மேடையில் போட்டிநிகழ்வாக நடைபெறும். பங்கெடுக்க விரும்புவோர் திருவேடத்திற்கான அனைத்துப் பொருட்களையும் தாமே எடுத்துவரவேண்டும். சைவத் தமிழ் மக்களுக்கு மதிப்பளிக்கக்கூடிய திருவேடம் எதையும் மேடையில் ஒப்பனைசெய்து வலம் வந்து, விரும்பின் 1 நிமிடம் தம் ஆற்றலை வெளிப்படுத்தலாம் அல்லது வெறும் ஒப்பனையுடன் வலம் வரலாம். ஒப்பனைக்கும், பாவனைக்கும் புள்ளிகள் வழங்கப்படும். **திருவேடம்தாங்கல் போட்டி விண்ணப்ப முடிவுத் திகதி: 31. 05. 2016 ஆகும்.**

**திருக்கதை:** மேற்காணும் போட்டிப் பட்டியலில் வழங்கப்பட்டிருக்கும் சைவசமயப்பெரியோர் வாழ்க்கைக் கதையினை பிள்ளைகள் தமது இயலில் கதையாக ஒப்புவிக்கவேண்டும். குறைந்தது பட்டியலில் குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்கு அமைவாக கதை அமையவேண்டும், ஆகக்கூடியது குறிக்கப்பட்ட நேரத்தைவிட 1 நிமிடம் அதிகம் எடுத்துக்கொள்ளலாம்.

✂

திருச்சிற்றம்பலம்

"சைவமும் தமிழும் போட்டி நிகழ்வு – 2016"

# விண்ணப்பப்படிவம்

போட்டியாளர் பெயர் தமிழில்: ____________________

போட்டியாளர் பெயர் ஆங்கிலத்தில்: ____________________

தந்தையின் பெயர் தமிழில்: ____________________

தந்தையின் பெயர் ஆங்கிலத்தில்: ____________________

முகவரி ஆங்கிலத்தில்: ____________________

____________________

பிறந்ததிகதி.: ____________ பால்.: ☐ ஆண் ☐ பெண்

தொலைபேசி இல.: ____________ மின்னஞ்சல்.: ____________

தங்கள் பிள்ளை பங்குபற்ற விரும்பும் போட்டி வலயம் ☐ சூரிச் ☐ மார்த்தினி ☐ பேர்ன் ☐ ஜெனீவா ☐ லவுசான் ☐ பாசல்

விண்ணப்பிக்கும் போட்டிகள்: ☐ தேவாரம் ☐ திருவாசகம் ☐ திருக்குறள் ☐ திருப்புகழ் ☐ திருக்கதை ☐ திருவுருவர்ணம் தீட்டல் ☐ திருவேடம் தாங்கல்

மேற்காணும் போட்டி விதிமுறைகள் அனைத்தையும் ஏற்று நான் எனது பிள்ளையை ____________ திகதி ____________ போட்டிநிலையத்தில் நடைபெறும் "சைவமும் தமிழும்" 2016 போட்டிக்கு இத்தால் விண்ணப்பிக்க சம்மதிக்கிறேன். போட்டியாளரது அடையாள அட்டை நகலினையும், மற்றும் போட்டிக்கட்டணம் செலுத்தியமைக்கான சான்றினையும் இணைத்து அனுப்புகிறேன்.

காலம்: ____________ பெற்றோர் ஒப்பம்: ____________

*பணியகப்பாவனைக்கு மட்டும் / இணைப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளனவா: ☐ கட்டணச்சான்று ☐ அடையாள அட்டை*

*குறிப்பு:*

விண்ணப்பம் கிடைத்த காலம், கோர்வை இல: